தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### இலவச வேளாண் பயிற்சியில் பங்கேற்க அழைப்பு

நாகை, திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள், கோவையில் 2 நாள் நடைபெறவுள்ள வேளாண்மை குறித்த இலவச பயிற்சியில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வேளாண் விஞ்ஞானி பரசுராமன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் இணைந்து மார் 29,30 ஆகிய இருநாள்களில் வேண்மை சார்ந்த இலவச பயிற்சியை இளைஞர்களுக்கு அளிக்கவுள்ளது. இதில் பருவத்துக்கேற்ற பயிர் ரகங்கள், நவீன தொழில்நுட்பம், மானியம் மற்றும் திட்டங்கள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்படும்.

நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இதில் பங்கேற்க தங்களது பெயரை முன்பதிவு செய்ய வேண்டும். குறுந்தகவலாக பதிவு செய்ய 9962840682, 9840974748 ஆகிய செல் பேசிகளுக்கு அனுப்பலாம். விவரங்கள் அறிய நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே உள்ள எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன, நாகை மாவட்ட கிராம வளமையத்தை அனுகலாம்.

### கலப்பின வெண்பன்றி வளர்ப்பு: மார்ச் 20-இல் இலவசப் பயிற்சி

கலப்பின வெண்பன்றி வளர்ப்பு குறித்த இலவசப் பயிற்சி நாமக்கல்லில் வருகிற 20-ஆம் தேதி அளிக்கப்பட உள்ளது. நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் அன்று காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்த ஒரு நாள் பயிற்சி வகுப்பில், பன்றி வளர்ப்பின் நன்மைகள், கலப்பின பன்றி இனங்கள், பண்ணை அமைவிடம், பண்ணை வீடு, இனப்பெருக்கம், சினைப் பன்றி பராமரிப்பு, பன்றிக் குட்டிகள் பராமரிப்பு, தீவன மேலாண்மை, நோய் பிரச்னைகள், நோய்த் தடுப்பு முறைகள் குறித்து விளக்கப்பட உள்ளது.

விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் இந்தப் பயிற்சியில் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள் தங்கள் பெயரை 19-ம் தேதிக்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04286-266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு பெறலாம் என நாமக்கல் வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் பா.மோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### நாமக்கல்லில் ரூ. 50 லட்சம் பருத்தி ஏலம்

அறுவடை குறைந்ததால் ஏலத்துக்கு பருத்தி வரத்து சரிவடைந்தது. இதனால், நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் சுமார் 3,300 மூட்டைகள் ரூ.50 லட்சத்துக்கு விற்பனையாகின.

நாமக்கல் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்தில் வாரம் தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகின்றன. இதன்படி, இந்த வாரம் வியாழக்கிழமை (மார்ச்13) நடைபெற்ற ஏலத்துக்கு 3,300 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. அவற்றில் டிசிஹெச் முதல் ரகம் குவிண்டால் ரூ.4,601 முதல் ரூ.6,095 வரையும், இரண்டாம் ரகம் குவிண்டால் ரூ.4,261 முதல் ரூ.4,690 வரையும், ஆர்சிஹெச் குவிண்டால் ரூ.4,771 முதல் ரூ.5,019 வரையும், சுரபி குவிண்டால் ரூ.5,319 முதல் ரூ.5,459 வரையும் ஏலம் போனது.

இதன்படி, மொத்த பருத்தி மூட்டைகளும் ரூ.50 லட்சத்துக்கு விற்பனையாகியதாகக் கூட்டுறவு அலுவலர்கள் தெரிவித்தனர்.

கடந்த 2 மாதங்களாக அறுவடை சீசன் என்பதால் பருத்தி வரத்து வாரம் 7,000 மூட்டைகள் வரை வரப்பெற்றன. தற்போது சீசன் முடிந்து அறுவடை குறைந்ததால் ஏலத்துக்கு பருத்தி வரத்தும் குறைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

### விலை குறைவால் மக்காச்சோளத்தை இருப்பு வைக்கும் விவசாயிகள்

மக்காச்சோளம் விலை வீழ்ச்சியால் விவசாயிகள் அதை இருப்பில் வைத்துள்ளனர்.

தமிழகத்தில் இந்தாண்டு மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களின் விலை உயரும் என்று எதிர்பார்த்த நிலையில், கர்நாடகம் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களின் வரத்து சந்தையில் அதிகரித்துள்ளது. கடந்த

ஆண்டு இதே காலகட்டத்தில் ஒரு குவிண்டால் மக்காச்சோளம் ரூ. 1400-க்கு விற்பனையானாது. தற்போது ரூ. 200 குறைந்து ஒரு குவிண்டால் ரூ. 1200-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அறுவடை சீசன் முடிந்ததும் விலை உயரும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் மக்காச்சோளத்தை கூட்டுறவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இருப்பு வைத்து குறைந்த வட்டியில் பொருளீட்டு கடனுதவி பெற்று வருகின்றனர். கடன் தேவையில்லாதவர்களுக்கு குறைந்த வாடகை மட்டும் வசூலிக்கப்படுகிறது. மேலும், மக்காச்சோளம் 6 மாதங்கள் வரை கெட்டுப்போகாமல் இருக்கும் என்பதால்

இருப்பு வைக்க பல்லடம், பொங்கலூர் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தென்னிந்தியாவில் உற்பத்தி பாதிப்பால் தேயிலை உற்பத்தி 5.9 சதவீதம் குறைந்தது!



புதுடில்லி : ஜனவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 5.9 சதவீதம் சரிந்து 2.06 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தேயிலை உற்பத்தியில், உலகளவில் இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் தமிழகம் உள்ளிட்ட தென்

மாநிலங்களில் தேயிலை அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. இதேப்போல் வடமாநிலங்களில் அசாமில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யப்படுகிறது. இந்நிலையில் ஜனவரி மாதத்திற்கான தேயிலை உற்பத்தியை மத்திய தேயிலை வாரியம் வெளியிட்டுள்ளது.

இதில் இம்மாதத்தில் தேயிலை உற்பத்தி 5.9 சதவீதம் சரிந்து 2.06 கோடி கிலோவாக குறைந்துள்ளது. தமிழகம் உள்பட தென்மாநிலங்களில் உற்பத்தி பெரிதும் குறைந்ததால், ஒட்டுமொத்த அளவில் நாட்டின் தேயிலை உற்பத்தி சரிவடைந்துள்ளது. தமிழகத்தில், ஜனவரி மாதத்தில் 1.15 கோடி கிலோ தேயிலை உற்பத்தியாகியுள்ளது. இது, 2013 ஜனவரியுடன் ஒப்பிடும்போது 15 சதவீதம் குறைவாகும்.

## மதுரை விவசாயிகளுக்கு கைகொடுக்கிறது குதிரைவாலி : மழையையும் தாங்கும் வறட்சியைத் தாங்கும்




மதுரை : கோவை வேளாண் பல்கலை அறிவியல் மையம் கண்டுபிடித்துள்ள, குறுந்தானிய குதிரைவாலி கோ (கேவி2) ரகம், மதுரை மாவட்டத்திற்கு, ஏற்றதென, நிரூபிக்கப்பட்டுள்ளது. மதுரை விவசாயக் கல்லுாரியின் வேளாண் அறிவியல் மையம் சார்பில், 2011 முதல், மூன்றாண்டுகளாக விவசாயிகளின் நிலத்தில், பயிரிடப்பட்டு, அதிகபட்ச விளைச்சல் இலக்கை எட்டியுள்ளது. இதுகுறித்து, மைய உதவி பேராசிரியர் செல்வி கூறியதாவது:திருமங்கலம், சேடபட்டி, கள்ளிப்பட்டி, கள்ளிக்குடி, உசிலம்பட்டி ஒன்றியங்கள் மழையை நம்பி பயிர் செய்யப்படுகின்றன. இங்கு மானாவாரியில் விவசாயிகள் குறுந்தானியங்களை பயிரிட்டாலும், எக்டேருக்கு ஒன்றே கால் டன் அளவில் தான் விளைச்சல் பெறுகின்றனர். உற்பத்தி செலவுடன் ஒப்பிடும் போது, லாபம் குறைவு தான்.எங்களது ரகத்தை எக்டேருக்கு

பத்து கிலோ விதைகளை சாகுபடி செய்தால், 95 நாட்களில் இரண்டரை டன் விளைச்சல் கிடைக்கும். வறட்சியைத் தாங்கும், மழைபெய்தாலும் பயிர் சாய்ந்து விடாமல் நிற்கும். 2011 முதல் 2012ல் கள்ளிக்குடியில்
சிவரக்கோட்டை, 2013ல் சேடபட்டியில் கே.ஆண்டிபட்டி, 2014ல் உசிலம்பட்டியில் ரங்கசாமிபட்டி கிராமங்களில் தலா பத்து விவசாயிகளைத் தேர்ந்தெடுத்தோம். ஒரு ஏக்கர் பரப்பளவில், அரை ஏக்கர் விவசாயிகள் விரும்பும் ரகத்தை பயிரிடுவது, அரை ஏக்கரில் எங்களது ரகத்தை பயிரிடுவதென பிரித்து செயல்படுத்தினோம். அரை ஏக்கருக்குரிய அதிக விளைச்சல் கிடைத்ததால், ஒவ்வொரு ஒன்றியத்திலும் 300 விவசாயிகள் வரை, இந்த ரகத்தை பயிரிடுகின்றனர்.தானியமாக விற்பதைக் காட்டிலும், விதையாக விற்பனை செய்தால், நல்ல லாபம் கிடைக்கும். விதை நீக்கிய தக்கையை, கால்நடை தீவனமாக தரலாம். விதைச் சான்று பெறுவதற்கு, வேளாண் உதவி இயக்குனர் அலுவலகம் மூலம், வழிகாட்டுகிறோம். எங்களிடமும் குறைந்த அளவில், விதைகள் விற்பனைக்கு உள்ளன. புரட்டாசி பட்டமும், அடுத்து வரக்கூடிய ஆடி பட்டமும் ஏற்றது. கிணற்று பாசனம் மூலம் விளைச்சல் பெறலாம், என்றார். விதைகள் தேவைக்கு:94431 85237

## பயிர் காப்பீட்டு திட்டம்தென்னை விவசாயிகள் பயன்பெற யோசனை

ஈரோடு: வறட்சியால் ஏற்படும் தென்னை மர இழப்புக்கு, அரசு வழங்கும் பயிர் காப்பீட்டு திட்டத்தில் விண்ணப்பித்து, விவசாயிகள் பயன் பெற வேண்டும், என்று வேளாண் துறை அழைப்பு விடுத்துள்ளது.
ஈரோடு மாவட்டத்தில், 6,000 ஹெக்டர் பரப்பளவில், தென்னை மரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. ஹெக்டருக்கு, 170 மரங்கள் வரை வளரும்.
தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மரத்தில் பூச்சி பாதிப்பு, வறட்சி, தீயினால் சேதமடைந்தால், அவர்களுக்கு தேசிய வேளாண் காப்பீட்டு திட்டம் மூலம் மரத்துக்கு, இவ்வளவு என்று பயிர் காப்பீடு வழங்கப்படுகிறது.இதன் மூலம் முழுமையாக நஷ்டம் ஏற்படாமல், தென்னை விவசாயிகள், ஓரளவு, பயன்பெற முடியும்.இந்த திட்டத்தில், பலனடைய, குறைந்தது, பத்து மரங்களுக்கு மேல் வைத்திருக்க வேண்டியது அவசியம். தீ விபத்து, இடி விழுதல், கடும் வறட்சி

மற்றும் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்டால், நான்கு முதல், 15 வயது வரை உள்ள மரத்துக்கு காப்பீட்டு தொகையாக, மரத்துக்கு, 600 ரூபாய் கிடைக்கும்.இதற்கு, பிரிமியம் தொகை மரத்துக்கு, 4.69 ரூபாய் செலுத்த வேண்டும். மானியம் நீங்கலாக, விவசாயிகள் செலுத்த வேண்டிய தொகை 1.15 ரூபாயாகும். அதேபோன்று, 16 முதல், 60 வயதுடைய மரங்களுக்கு, 1,150 ரூபாய் வழங்கப்படுகிறது. இதற்கு பிரிமியம், 6.35 ரூபாய். விவசாயிகள் செலுத்த வேண்டியது, ஒரு மரத்துக்கு, 1.58 ரூபாய் மட்டுமே. காய்க்கும் மரங்களுக்கு மட்டுமே, இன்சூரன்ஸ் வழங்கப்படும்.மற்ற மாநிலங்களில், தென்னை பயிர் காப்பிட்டு திட்டம், தோட்டக்கலைத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. தமிழகத்தில் இத்திட்டம், வேளாண்மை துறையின் கீழ் செயல்பட்டு வருகிறது.பாலிசி துவங்கிய தேதியில் இருந்து, ஒரு மாத காலத்துக்கு இழப்பீடு வழங்கப்படாது.ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்க வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், வேளாண்மை துறையில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.வறட்சியால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்க, விவசாயிகள், அருகில் உள்ள, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை அணுகலாம், என்று வேளாண் வணிகத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கடலைக்கு விலை இல்லாததால் வருத்தம்; காளையார்கோவில் விவசாயிகள்

காளையார்கோவில்: காளையார்கோவிலில் அரசு அறிவித்து வரும் மானிய திட்டங்களை வேளாண் துறை அதிகாரிகள் செயல்படுத்த வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ் ஒன்றியத்தில் கிணற்று பாசனத்தின் மூலம் 5 ஆயிரம் ஏக்கரில் கடலை சாகுபடி நடைபெற்றுவருகிறது. மழை பொய்த்து, நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தண்ணீர் பற்றாக்குறை நிலவுகிறது. வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில்லை. பூச்சிதாக்குதலால் கடலை மகசூல் மிகவும் குறைந்து விட்டது. பல்வேறு கஷ்டங்களுக்கு இடையே விளைந்த கடலைக்கு அரசு விலை நிர்ணயம் செய்யாததால், வியாபாரிகளுக்கு அடிமாட்டுவிலைக்கு விவசாயிகள் விற்கவேண்டியநிலை உள்ளது. விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகிறார்கள்.பெரும்பாலான விவசாயிகள் கடலை சாகுபடி செய்வதில் ஆர்வம் இல்லாமல் விளை நிலத்தை தரிசாக விட்டு வருகின்றனர். சானாஊரணி விவசாயி ராஜாங்கம் கூறுகையில்,"ஒரு ஏக்கர் கடலை சாகுபடி செய்ய உற்பத்தி செலவு

15ஆயிரம் ரூபாய் செலவு ஆகிறது. 15 மூடை மகசூல் கிடைத்து வருகிறது. அரசு விலை நிர்ணயம் செய்யாததால், உள்ளூர் வியாபாரிகள் 38 கிலோ மூடைக்கு 1000 ரூபாய்க்கு வாங்கி வருகிறார்கள். கடந்த ஆண்டு ஒரு மூடை கடலை 1900 ரூபாய் வரை விற்பனையானது. சாகுபடிக்கு தேவையான உழவுகூலி, வேலை ஆட்கள் கூலி,உரம்,பூச்சிக் கொல்லி மருந்து விலை பலமடங்கு உயர்ந்துவிட்டது. ஆனால்,விவசாயிகளின் உற்பத்தி பொருளுக்கு மட்டும் விலை இல்லை,' என்றார். அரசு வேளாண்மை துறைமூலம் அறிவித்து வரும் பல மானிய திட்டங்கள் விவசாயிகளை சென்றடைகிறது. இனி வரும் காலங்களிலாவது வேளாண் துறைசார்பில் விவசாயிகளுக்கு அதிக வருமானம் கிடைக்க நவீன முறையில் தொழில்நுட்ப பயிற்சி வழங்க வேண்டும். விவசாயிகளின் விளைபொருட்களுக்கு அரசே விலைநிர்ணயம் செய்ய வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எண்ணெய் இறக்குமதி 40% சரிவு**



புதுடெல்லி: இந்தியாவில் சமையல் எண்ணெய் இறக்குமதி 3 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு 40% குறைந்துள்ளது. இந்தியாவில் எண்ணெய் தேவையில் 60% இறக்குமதி மூலமே பெறப்படுகிறது. அதிலும் சமையல் எண்ணெய்யில் 80% பாமாயில் இறக்குமதி உள்ளது. வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும்

சமையல் எண்ணெய் அளவு கடந்தாண்டு பிப்ரவரியில் 9.69 லட்சம் டன்னாக இருந்தது. ஆனால், கடந்த மாதம் 40% குறைந்து 5.78 லட்சம் டன் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. பாமாயில் இறக்குமதி குறைந்ததே இதற்கு கார ணம் என எஸ்இஏ அமைப்பு தெரிவித்துள்ளது.

**நாமக்கல் முட்டை விலை 290 காசு**



நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் வியாழக்கிழமை நடந்தது. கூட்டத்தில், முட்டை விற்பனை நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் மற்றும் வியாபாரிகள் ஆலோசித்தனர். முட்டை விலை யில், 15 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து முட்டை யின் பண்ணை கொள்முதல் விலை 305 காசில் இருந்து 290 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது.

நாட்டின் பிற மண்டலங்களிலும் முட்டை விலை தொடர்ந்து சரிந்து வருகிறது.மேலும், என்இசிசி அறிவித்த விலைக்கே அனைத்து பண்ணையாளர்களும் விற்பனை செய்யவேண்டும் என்ற நோக்கில், முட்டை விலை அதிரடியாக குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 2 வாரத்தில் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 60 காசு வரை குறைந்துள்ளது. ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.44 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.66 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

**தேயிலை உற்பத்தி பாதிப்பு**



புதுடெல்லி: மத்திய தேயிலை வாரியம் ஒவ்வொரு மாதமும் தேயிலை உற்பத்தி குறித்த புள்ளி விவரத்தை வெளியிட்டு வருகிறது. அதன்படி, கடந்த ஜனவரி மாதம் 5.9 சதவிகிதம் சரிந்து 2.09 கோடி கிலோவாக குறைந்துள்ளது என்று தேயிலை உற்பத்தி வாரியம் அறிக்கை வெளியிட்டுள்ளது. தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் உற்பத்தி பாதித்ததால் சரிவு ஏற்பட்டுள்ளது. தமிழகத்தில் கடந்த ஜனவரியில் 1.15 கோடி கிலோ தேயிலை உற்பத்தியாகியுள்ளது. இது 2013ம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஒப்பிட்டு பார்க்கும்போது 15 சதவிகிதம் குறைவு என்று தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

**அன்னாசி பழம் விலை சரிவு கிலோ ரூ30க்கு விற்பனை**

சேலம், : கேரள மாநிலம் முழுவதும் அன்னாசி பழங்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. கேரளாவில் இருந்தும் தமிழகத்தின் கொல்லிமலையில் இருந்தும் சேலம் மார்கெட்டிற்கு அன்னாசி பழங்கள் விற்பனைக்கு வருகிறது.

கடந்த சில நாட்களாகவே அன்னாசி விலை ஒரு நிலையில் இல்லாமல் ஏற்றத்தாழ்வுகளுடன் இருந்தது. கடந்த டிசம்பர் மாத இறுதியில் கிலோ ரூ30 முதல் ரூ35 வரை விற்பனையான அன்னாசி பழங்கள் கடந்த ஜனவரி மாதத்தில் கிலோ ரூ10 வரை விலை குறைந்து ரூ25 வரை விற்பனையானது. இந்நிலையில் பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் ரூ10 வரை விலை அதிகரித்து கிலோ கி35 வரை விற்பனையானது. இதையடுத்து வரத்து குறைவால் அதே வாரத்தில் கிலோவிற்கு ரூ5 வரை மேலும் அதிகரித்தது. இந்நிலையில் தற்போது வெயில் காலம் துவங்கியுள்ளதால் அன்னாசி பழம் விலை கிலோவிற்கு ரூ10 வரை விலை

குறைந்துள்ளது. தற்போது கிலோ ரூ30 வரை விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறுகையில், 'தற்போது அன்னாசி பழங்கள் குறைந்த அளவே விற்பனைக்கு வருகிறது. இருந்தபோதிலும், வெயில் காலங்களில் முலாம்பழம், தர்பூசணி ஆகியவற்றின் விற்பனை யே அதிகளவில் இருப்பதால் அன்னாசி விலை குறைந்துள்ளது. அன்னாசி பழங்களை ஜுஸ் வியாபாரிகள் மட்டுமே வாங்கிச்செல்கின்றனர். இனிவரும் நாட்களில் அன்னாசி விலை மேலும் குறையும்' என்றனர்.

**வாழையில் ஊடுபயிராக தக்காளி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்**

ரிஷிவந்தியம், : விழுப்புரம் மாவட்டம் ரிஷிவந்தியம் ஒன்றிய பகுதிகளில் கடந்த ஆறு மாதமாக பருவமழை பொய்த்து விட்டதாலும் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக உள்ளதாலும் விவசாயிகள் அண்டை மாநிலங்களான ஆந்திரா, கேரளா, கர்நாடகா ஆகிய பகுதிகளுக்கு கூலி வேலைக்கு செல்ல தொடங்கியுள்ளனர். ஒரு சில விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்காமலும், குடும்ப செலவிற்கு பணம் இல்லாமலும் தங்கள் கால் நடைகளை விற்பனை செய்து வருகின்றனர்.

ஆனால் ஒரு சில விவசாயிகள், தொடர்ந்து விவசாய பணிகளில் ஆர்வம் காட்டி வருகின்றனர். கடம்பூர் பகுதி விவசாயி ஒருவர் நெல், கரும்பு போன்ற பயிர்களை தவிர்த்து விட்டு வாழை பயிர் செய்துள்ளார். அதற்கு ஊடு பயிராக தக்காளி பயிரிட்டுள்ளார். வாழைக்கு முன்பாக தக்காளி காய்க்கத் தொடங்கி விடும். மேலும் இதனால் வருமானம் அதிக அளவில் கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார். இவரை போன்று வாழை தோட்டத்தில் ஊடு பயிர் செய்வதில் மற்ற விவசாயிகளும் ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர்.

**காணை நோய் தடுப்பூசி முகாம்**

சிவகங்கை, : காளையார்கோவில் கால்நடை மருந்தகம் சார்பில் சாணாஊரணி, சிலையாஊரணி, பருத்திக்கண்மாய், செவல்புஞ்சை, ஏ.வேலாங்குளம், மாந்தாளி ஆகிய ஊர்களில் காணை நோய் தடுப்பூசி முகாம் நடந்தது. கோடைக் காலங்களில் காணை நோய் வராமல் தடுக்க 3 மாத கன்றுக்குட்டிகளில் இருந்து அனைத்து

மாடுகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது. இம்முகாமில் சுமார் 500 மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடை மருத்துவர் காமுகதிரவன், ஆவின் மருத்துவர் சண்முகநாதன், ஆய்வாளர் ரோஸ்லின், பராமரிப்பு உதவியாளர்கள் மனுவேல், வேதவள்ளி, ஆவின் காமராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருந்தியநெல் சாகுபடி செயல்விளக்க பயிற்சி**

சிவகாசி, : வெம்பக்கோட்டை ஒன்றியம் நதிக்குடி, திருவேங்கிடபுரம் கிராமத்தில் விரிவாக்க மறு சீரமைப்பு திட்டத்தின் கீழ திருந்தியநெல் சாகுபடி செயல் வளக்க பயிற்ச முகாம் நடைபெற்றது.

வேளாண் உதவி இயக்குனர் வனஜா தலைமை வகித்து பேசுகையில், திருந்திய நெல்சாகுபடி திட்டத்தில் நெல் சாகுபடி செயதால் தண்ணீர் பற்றாக்குறையிலும் அதிக மகசூல் பெற முடியும் என்றார். இந்நிகழச்சியில் கலந்து கொண்ட விவசாயி முடியப்பன் திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் நெல் பயிர் சாகுபடி செய்து அதிக மகசூல் பெற்றதாக தெரிவித்தார். வெம்பக்கோட்டை ஒன்றிய அட்மா வட்டார தொழல் நுட்ப மேலாளர் முத்துசெல்வி, திட்ட தொழ¤ல் நுட்ப வல்லுனர்கள் தாமரை செல்வி, சதீஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

சீர்காழி, : சீர்காழி அருகே திருமுல்லைவாசல் ஊராட்சியில் கால்நடைகளுக்கு இலவச கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் ரவீந்திரன் தலை மை வகித்தார். கால்நடை உதவி மருத்துவர்கள் எஸ்வந்த்ராவ், விவேகானந்தன் முன் னிலை வகித்தனர். ஊராட்சி துணைத்தலைவர் முருகேசன் வரவேற்றார்.

முகாமில் திருமுல்லைவாசல், தொடுவாய் ஆகிய பகுதிகளில் 874 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இதில் ஊராட்சித்தலைவர் செங்குட்டுவன், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் பழனிவேலு, ராமச்சந்திரன் கலந்து கொண்டனர். ஊராட்சி செயலாளர் ரமேஷ் நன்றி கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### கோழிப்பண்ணையாளர்களுக்கு கலப்படம் இல்லாத மருந்துகளை வினியோகம் செய்ய மருந்தகம் தமிழ்நாடு முட்டைக்கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் தகவல்



நாமக்கல், - கோழிப்பண்ணையாளர் களுக்கு கலப்படம் இல்லாத மருந்துகளை வினியோகம் செய்ய இன்னும் 3 மாதங்களில் மருந்தகம் திறக்க உள்ளதாக தமிழ்நாடு முட்டைக் கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள் ளது.

<u>பதவி ஏற்பு விழா</u>

நாமக்கல்லை சேர்ந்த முன் னணி கோழிப்பண்ணையா ளர்கள் தமிழ்நாடு முட்டைக் கோழி பண்ணையாளர்கள் சம்மேளனம் என்ற புதிய அமைப்பை ஏற்படுத்தி உள்ள னர். இதன் தலைமை அலுவல கம் நாமக்கல் – திருச்சி ரோட் டில் வாங்கிலி இன்டர்நேசனல் ஓட்டல் எதிரே உள்ள கட்டிடத்தில் அமைக்கப்பட்டு உள்ளது. இதன் தொடக்கவிழா நடைபெற்றது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் நாமக்கல் மண்டல தலைவர் டாக்டர் செல்வராஜ் குத்து விளக்கு ஏற்றி சம்மேளனத்தை தொடங்கி வைத்தார். பின்னர் சம்மேளன புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் நடந்தது. இதில் டாக்டர் செல்வராஜ், புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>மே மாதம் வரை நீடிக்கும்</u>

தற்போதைய விலை குறைப்பு ஆண்டுதோறும் ஏற்படுவது தான். இந்த நிலை மே மாதம் 2–வது வாரம் வரை நீடிக்கும். அதன்பிறகு 5, 6 மாதங்களுக்கு முட்டைக்கு நல்ல விலை கிடைக்கும். தற்போது நிர்ணயிக்கப்பட்டு உள்ள விலையால், ஹைதரா பாத்தில் இருந்து ஒரு முட்டை கூட இங்கு கொண்டு வர முடியாது. தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு முட்டை வியாபாரிகளுக்கு எதிரானது இல்லை. எனவே நாணயமான லாபம் பெற்றவர்கள் எங்க ளுக்கு ஆதரவு தந்து வருகிறார் கள். அதிக லாபம் சம்பாதித்த நபர்கள் எதிர்க்கிறார்கள். முட்டை விலையை காட்டிலும் நோய் தற்போது முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது. எனவே பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பதில், சம்மேளனம் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். இவ்வாறு டாக்டர் செல்வராஜ் பேசினார்.

முன்னதாக சம்மேளனத்தின் தலைவராக முத்துசாமி, உப தலைவராக வி.சுப்பிரமணியம், செயலாளராக ராஜேந்திரன், துணை செயலாளர்களாக ஆர்.சுப்பிரமணியம், ஆறு முகம், பொருளாளராக சரவணக்குமார் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பொறுப்பேற்று கொண்ட னர்.

<u>3 மாதத்தில் மருந்தகம்</u>

பின்னர் சம்மேளனத்தின் தலைவர் முத்துசாமி கூறிய தாவது:–

கடந்த ஆண்டு முட்டை விலை நிர்ணயத்தில் 60 பைசா வரை மைனஸ் இருந்தது. இதனால் பண்ணையாளர் களுக்கு லட்சக்கணக்கில் நஷ்டம் ஏற்பட்டது. இதனை தடுக்கும் வகையில் ஜனவரி 1–ந் தேதி முதல் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயம் செய்யும் விலைக்கே முட்டை களை விற்பனை செய்து வருகிறோம்.

ஆந்திராவைபோல தமிழகத் திலும் கோழிப்பண்ணை தொழிலை விவசாயம் சார்ந்த தொழிலாக மாற்ற மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்த உள்ளோம். கோழிப்பண்ணை களுக்கு சலுகை விலையில் மின்சாரம் கிடைக்க நட வடிக்கை எடுப்போம். கலப் பினம் இல்லாத மருந்துகளை நேரடியாக மருந்து கம்பெனி களிடம் இருந்து வாங்கி, பண் ணையாளர்களுக்கு வழங்க, சம்மேளனத்தின் சார்பில் இன்னும் 3 மாதங்களில் மருந்தகம் திறக்க உள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் முட்டை வியாபாரிகள் சங்க தலைவர் ஆனந்தன் மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**கோபியில் வரத்து அதிகரித்ததால் தர்பூசணி விலை குறைந்தது ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை**



கோபிசெட்டிபாளையம், கோபியில் தர்பூசணி வரத்து அதிகரித்ததால் விலை குறைந்து ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

**சுட்டெரிக்கும் வெயில்**

தமிழ்நாட்டில் கோடை வெயில் சுட்டெரிக்க தொடங்கிவிட்டது. கோடை காலம் தொடக்கத்திலேயே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. பொதுமக்கள் வீட்டைவிட்டு வெளியில் வரமுடியாத நிலை உள்ளது. பெண்கள் சாலையில் நடந்துசெல்லும்போது குடையை பிடித்துக்கொண்டும், இருசக்கர வாகனங்களில் செல்லும்போது துணியால் தலையில் போர்த்தி கொண்டும் செல்கிறார்கள்.

கோடை வெயிலை சமாளிக்கவும், தாகத்தை தீர்க்கவும் பொதுமக்கள் குளிர்பானங்கள், இளநீர், தர்பூசணி, நுங்கு, பதனீர் போன்றவற்றை வாங்கி விரும்பி சாப்பிடுகிறார்கள்.

**தற்காலிக கடைகள்**

ஈரோடு மாவட்டத்தில் கடந்த ஆண்டைபோல் இந்த ஆண்டும் வெயில் சுட்டெரிக்க தொடங்கியுள்ளது. கோபிசெட்டிபாளையம் பகுதியில் தர்பூசணி, இளநீர் விற்பனை செய்யப்படும் தற்காலிக கடைகள் ஆங்காங்கே சாலையோரம் முளைத்து உள்ளன. சாலையோரங்களில் தர்பூசணி குவித்து வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அந்த வழியாக வாகனங்களில் செல்பவர்கள் தாகம் தீர்க்க இளநீர், கம்பங்கூழ், தர்பூசணி, பதனீர், நுங்கு போன்றவற்றை சாப்பிட்டுவிட்டு செல்கிறார்கள்.

**<u>விலை குறைவு</u>**

கோபி பகுதியில் தர்பூசணி வரத்து அதிகரித்ததை தொடர்ந்து விலை குறைந்து உள்ளது. கடந்த சில வாரங்களுக்கு முன்பு தர்பூசணி ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது வரத்து அதிகரித்ததை தொடர்ந்து ஒரு கிலோ ரூ.15–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதுகுறித்து வியாபாரி ஒருவர் கூறும்போது, "வெயில் அதிகமாக அடிப்பதால் ஏராளமானவர்கள் தர்பூசணியை விரும்பி சாப்பிடுகிறார்கள். திண்டிவனம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இருந்து தர்பூசணி விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.20–க்கு விற்பனை செய்யப்பட்ட தர்பூசணி, இந்த வாரம் ஒரு கிலோ ரூ.15–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் ஒரு சில வாரங்களில் தர்பூசணியின் விலை உயர வாய்ப்பு உள்ளது." என்றார்.

## திருவள்ளூருக்கு 1,110டன் நெல்மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன



தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு அரவைக்காக அனுப்ப நெல் மூட்டைகள் லாரிகளில் ஏற்றப்பட்டு இருந்த காட்சி

தஞ்சாவூர், தஞ்சையில் இருந்துசரக்கு ரெயில் மூலம் திருவள்ளூருக்கு 1,110 டன் நெல் மூட்டைகள் அரவைக்கு கொண்டு செல்லப்பட்டன.

<u>நெற்களஞ்சியம்</u>

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக தஞ்சை விளங்கி வருகிறது. இங்கு குறுவை, சம்பா, தாளடி என 3 போகம் நெல் சாகுபடி நடைபெறும். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் நெல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு சேமிப்புக்கிடங்குகளில் இருப்பு வைக்கப்படும்.

இவ்வாறு இருப்பு வைக்கப்படும் நெல் மூட்டைகள் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும், தஞ்சையில் உள்ள பல்வேறு அரிசி ஆலைகளுக்கும் அரவைக்கு அனுப்பி வைக்கப்படும். தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா நெல் அறுவடை பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் சென்னை, திருவள்ளூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோவை, திருநெல்வேலி உள்பட பல்வேறு மாவட்டங்களுக்கு ரெயில் மற்றும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன.

1,110 டன்

இதே போல் நேற்று தஞ்சையில் இருந்து திருவள்ளூருக்கு சரக்கு ரெயில் மூலம் 1,110 டன் நெல் மூட்டைகள் அரவைக்காக கொண்டு செல்லப்பட்டன. இதற்காக நெல் மூட்டைகள் சேமிப்புக்கிடங்கு மற்றும் கொள்முதல் நிலையங்களில் இருந்து 105 லாரிகளில் கொண்டுவரப்பட்டு 29 ரெயில் பெட்டிகள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

**நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் விவசாயிகள் சங்கம் கோரிக்கை**



திருவாரூர், - நெல் குவிண்டாலுக்கு ரூ.3 ஆயிரம் வழங்க வேண்டும் என்று விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

செயற்குழு கூட்டம்

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் நல சங்கத்தின் செயற்குழு கூட்டம் திருவாருரில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் சேதுராமன் தலைமை தாங்கினார்¢.

இதில் செயலாளர் ராமமூர்த்தி, செயற்குழு உறுப்பினர் செந் தில்குமார்,

ராஜேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் குமரேசன், முருகேசன் உள்பட பலர் கலந்து கொண்டனர். கூட் டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

காவிரி டெல்டா பகுதியில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் மீத்தேன் வாயு திட்டத்தை கைவிட வேண்டும். தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய காவிரி நீரை பெற்று காவிரி வடிநிலப்பகுதி வறட்சியால் அழிவதை தடுக்க நட வடிக்கை எடுக்க வேண்டும்.

திமுக. கூட்டணிக்கு ஆதரவு

ஆள்பற்றாக்குறை, இயந்திர மயம், அதிகரிக்கும் பணச்சுமை ஆகியவற்றால் விவசாயிகள் பெரிதும் சிரமப்படுவததால் நெல் குவிண்டாலுக்கு ரூ. 3 ஆயிரம் வழங்க வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.5 ஆயிரம் வழங்க வேண்டும். உடனடியாக பாரதீய கிசான் வங்கியை தொடங்க வேண்டும்.

கூட்டத்திற்கு பின்னர் மாவட்ட தலைவர் சேதுராமன் நிருபர்களுக்கு அளித்த பேட்டி யில் கூறியதவாது:-

தி.மு.க. தேர்தல் அறிக்கை யில் சிறு, குறு விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி செய்யப் படும் என்றும், இடு பொருட் களுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும் என்றும், மீத் தேன் வாயு எடுக்கும் திட் டத்தை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் பயன் அடையும் வகையில் தி.மு.க. தேர்தல் அறிக்கை உள்ளது. எனவே பாராளுமன்ற தேர்தலில் விவசாயிகள் நலச்சங்கம் தி.மு.க. கூட்டணிக்கு ஆதரவு அளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## ஆண்டுக்கு ரூ.10 லட்சம் வரை வருவாய் ஈட்டித்தரும் 'பசுமைக்குடில் சாகுபடி'



கண்கவர் வண்ண மலர்களுடன் பூத்துக் குலுங்கும் செர்பரா மலர்த்தோட்டம். படம்: பி.வேளாங்கண்ணி ராஜ்

தமிழக அரசு தோட்டக்கலைத் துறையின் “பாதுகாக்கப்பட்ட உயர்தர பசுமைக்குடில் சாகுபடித் திட்டம்” மூலம் ஆண்டுக்கு ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை சம்பாதிக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பசுமைக்குடில் என்ற தொழில்நுட்பம் இந்தியாவில் புனே, பெங்களூருக்கு அடுத்தபடியாக தமிழ்நாட்டில் ஓசூர் பகுதிகளில் 1990-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. “பாதுகாக்கப்பட்ட உயர்தர பசுமைக்குடில் சாகுபடித் திட்டம்” என்று அழைக்கப்படும் இத்திட்டம் கிருஷ்ணகிரி, திண்டுக்கல், கொடைக்கானல், ஊட்டி ஆகிய பகுதிகளைத் தொடர்ந்து மாநிலத்தின் பிற பகுதிகளிலும் பிரபலமடைந்து வருகிறது.

குறைந்த நிலப்பரப்பில், குறைவான ஆட்களைக் கொண்டு அதிக மகசூல் பெறுவதே இத்திட்டத்தின் நோக்கம். பசுமைக் குடிலில் ஆண்டு முழுவதும் சாகுபடி செய்து விளைபொருட்களுக்கு நல்லவிலை பெற முடியும் என்பது பயனாளிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## ஆண்டு முழுவதும் சாகுபடி

பசுமைக்குடிலில் ஆண்டு முழுவதும் ரோஜாப்பூ, பூச்செண்டில் பயன்படுத்தப்படும் செர்பரா, கார்னேஷன் ஆகிய பூக்கள், தக்காளி, பீன்ஸ், முலாம்பழம், ஐரோப்பிய வெள்ளரிக்காய், ரசத்துக்குப் பயன் படுத்தப்படும் செர்ரி தக்காளி, நட்சத்திர ஓட்டல்களில் பயன்படுத்தப்படும் காய்கறிகள், குடமிளகாய் ஆகியவற்றைச் சாகுபடி செய்யலாம்.

இதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் கலைச்செல்வி, அதிகாரி கே.செந்தில்குமார் ஆகியோர் கூறியதாவது:

## செர்பரா பூ

பசுமைக்குடில் சாகுபடிக்கு குறைந்தபட்சம் 1000 சதுர மீட்டர் நிலப்பரப்பு (கால் ஏக்கர்) இருக்க வேண்டும். பசுமைக்குடில் அமைக்கும்போது ஒரு சதுர மீட்டருக்கு ரூ.935 செலவாகும். இதில், ரூ.467.50 அரசு மானியம், மீதித்தொகையை ரூ.467.50-ஐ பயனாளி செலுத்த வேண்டும். ஒரு ஏக்கரில் பசுமைக்குடில் அமைக்க ரூ.37.40 லட்சம் செலவாகும். இதில், ரூ.18.70 லட்சம் மானியம்.

“செர்பரா பூ” (gerbera) சாகுபடி செய்தால், ஒரு ஏக்கரில் 24 ஆயிரம் செடிகளை நட முடியும். ஒரு செடியில் ஆண்டுக்கு 50 பூக்கள் வரை பூக்கும். மொத்தம் 12 லட்சம் பூக்கள் சாகுபடி செய்யலாம். இதன்மூலம் ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.36 லட்சம் வருவாய் கிடைக்கும். மாதத்துக்கு ரூ.3 லட்சம். செலவுபோக ரூ.1 லட்சம் முதல் ரூ.1.25 லட்சம் வரை நிகர வருவாய் ஈட்டமுடியும். “செர்பரா பூ” மலர்செண்டு தயாரிக்கவும், திருமணம், கட்சிப் பொதுக்கூட்டம் உள்ளிட்ட மேடைகளை அலங்கரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

ரோஜாப்பூ சாகுபடி செய்தால், காதலர் தினம், கிறிஸ்துமஸ் காலங் களில் நல்ல விலை கிடைக்கும். மற்ற நாட்களில் சராசரியாக ஒரு ரோஜாப்பூ ரூ.2.50 முதல் ரூ.3-க்கு விற்பனையாகும்.

**குடமிளகாய்**

ஒரு ஏக்கரில் குடமிளகாய் (capsicum) சாகுபடி செய்தால், ஒன்பது மாதத்தில் 40 டன் கிடைக்கும். ஒரு கிலோ குடமிளகாய் ரூ.40-க்கு விற்கும். ஏக்கருக்கு ரூ.16 லட்சம் வருவாய் கிடைக்கும். செலவுபோக ரூ.8 லட்சம் நிகர வருவாய் ஈட்டலாம். பசுமைக்குடில் சாகுபடி பரப்புக்கு ஏற்ப ஆண்டுக்கு ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை சம்பாதிக்கலாம் என்றார் அவர். மேலும் விவரங்களுக்கு 04343- 231130 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.